**நவீன தொழில்நுட்பம் தொடர்பான ஆதர் சீ கிளார்க் நிறுவனம் - 2024**

-----------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நவீன தொழில்நுட்பம் தொடர்பான ஆதர் சீ கிளார்க் நிறுவனத்தின் (''நிறுவனம்'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களுடன் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் காண்பித்துள்ள விடயங்களிலான தாக்கங்களை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் காண்பித்துள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கதயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. அடிப்படையினை பயன்படுத்துதல்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது பிரகாரம்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன்

தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 92 பந்தியின் பிரகாரம் கிரயம் ரூபா 280,927,441 தொகையான முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட போதும் தொடர்ந்தும் பயன்படுத்தும் ஆதன பொறி உபகரணங்களின் மொத்த முன் கொண்டு செல்லும் பெறுமானத்தை | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 92 பந்தியின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட எனினும் தொடர்ந்தும் பயன்படுத்தும் சொத்துக்களில் மொத்த முன் கொண்டு செல்லும் |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | | பெறுமானத்தை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் திறைசேரியிலிருந்த கிடைத்த மூலதன மானியம் ரூபா 19,137,133 தொகை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 பிரகாரம் ஆண்டில் பறிமாற்றப்படாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து கிடைத்த வருமானமாக இனங்காணாது உரிமை மூலதனத்தின் கீழ் அரச மூலதன மானியமாக இனங்காணப்பட்டிருந்தது. மேலும், முன்னைய ஆண்டுகளில் கிடைத்த திறைசேரி மானியமும் நியமம் பிரகாரம் அந்த ஆண்டுகளில் வருமானமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி செலவினத்தில் மீளாய்வாண்டிற்குரிய நலனை வருமானமாக நிதிச் செயலாற்றுகை கூற்றிற்கு உள்ளடக்கி அதற்கு நேரொத்ததாக காலக்கழிவாக நிதிச் செயலாற்றல் கூற்றிலிருந்து கழித்து இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இற்கு இணங்கியதாக நடவடிக்கை எடுத்துள்ளது என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பிரகாரம் திறைசேரி மானியம் வருமானமாக இனங்காணப்பட வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டு குறைபாடகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 11 பாடநெறிகளின் மீளாய்வாண்டிற்குரியதான வருமானம் ரூபா 4,314,191 தொகையான போதும் நிதிச் செயலாற்றல் கூற்றில் அதை ரூபா 5,065,000 தொகையாக இனங்காணப்பட்டிருந்ததால் ரூபா 750,809 இனால் வருமானம் கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது. | வருமானத்தை இனங்காணும் நிறுவன கொள்கைக்கு இணங்கி 2023 ஆண்டின் வருமானத்தை பிற்போடப்பட்ட வருமானமாக இனங்காணப்பட்டிருந்ததுடன் 2024 ஆண்டின் போது ஆண்டில் வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 139,704,380 தொகையான முதலீடுக்கிடையில் ரூபா 33,696,000 தொகை முதலீடுகளிற்குரிய ரூபா 2,806,177 தொகையான வட்டி வருமானத்தை, வருமானமாக இனங்காணிடிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய வட்டி வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வெண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திறைசேரி உண்டியல்களில் ரூபா 17,115,565 தொகை மற்றும் நிலையான வைப்புக்களில் ரூபா 88,892,815 தொகையான முதலீடுகளிற்கான மீளாய்வாண்டிற்குரியதான வட்டி வருமானம் ரூபா 7,811,967 தொகையான போதும் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூா 6,904,746 தொகையாக கணக்கீடு செய்யப்பட்டதனால் வட்டி வருமானம் ரூபா 907,221 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | மீளாய்வாண்டிற்குரிய முதலீடுகளிற்கான வட்டி வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வெண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனா ன தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 2(1) மற்றும் 102 பிரிவு | வருமான வரிக்காக பதிவு செய்ய அல்லது வரி விடுவித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உழைப்பின் போது பெறுமதியின் மீது வரி பதிவு விடுவிக்கப்பட்டுள்ளதால் வருமான வரிக்காக பதிவு செய்ய தேவையில்லை. | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 திகதி அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 மூலம் திருத்திய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 371 (2) | நிமித்த உப கட்டுநிதி பதிவிநிலை உத்தியோகத்தரிற்கு மாத்திரம் வழங்க வேண்டிய போதும் 11 சந்தர்ப்பங்களில் கூட்டுத் தொகை ரூபா 1,799,650 ஆன நிமித்த உப கட்டுநிதி பதவிநிலை அல்லாத உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்டிருந்தன. | நிமித்த உப கட்டுநிதி பதிவிநிலை உத்தியோகத்தரிற்கு மாத்திரம் வழங்க வேண்டிய போதும் ஊழியர் பற்றாக்குறை காரணமாக பதவிநிலை அல்லாத உத்தியோகத்தர்களிற்கு வழங்க நேரிட்டதென. | நிதிப் பிரமாணம் பதவிநிலை அல்லாத உத்தியோகத்தர களிற்கு கட்டுநிதி வழங்குவது சட்டபூர்வம் அல்லாததுட்ன ஆளணி வெற்றிடம் காணப்படின் ஆட்சேர்ப்பை துரிதப்படுத்த வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட இலங்கை | அரச நிதி ஒழுக்கத்தை பேணிச் செல்வதற்காக விஷேட சந்தர்ப்பங்களில் பாராளுமன்றம் அங்கீகரிக்கும் விசேட சட்டமொன்றினால் தவிர ஏனைய எவ்வித | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்படும் பாதீடுகளிற்கு வெளியே வருமானம் சேகரித்தல் மற்றும் செலவினம் மேற்கொள்ளல் தொடர்பாக அரச நிதி அமைச்சின் தலைமையில் | சுற்றறிக்கை மற்றும் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் நிதியம் பேணிச்செல்வதை ன மேற்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 876 | முறைகளினாலும் புதிய நிதியங்கள் உருவாக்குதல் முழுமையாக தடையாகுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் நிறுவனத்தினால் ஆராய்ச்சி அபிவிருத்தி புதிய தொழில்நுட்ப புத்தாக்கத்தை ஊக்குவித்தல், வானியல் விஞ்ஞானத்தை வின்வெளியில் பயன்படுத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகிய கடமைகளிற்காக பேணிச் செல்லப்பட்டிருந்த நான்கு நிதியங்களில் ஆண்டு இறுதியில் கூட்டுத்தொகை ரூபா 99,341,390 தொகையான மீதி நிலவியது. | பல கூட்டங்கள் நடாத்தியுள்ளன. அங்கு ஏற்படும் உடன்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் மீது இந்த விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடி தீர்மானம் எடுத்தல் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | |
| (ஈ) | 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகம் செய்யப்பட்ட செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்குரிய வரைபு ஆண்டறிக்கையின் பிரதியொன்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் ஆண்டறிக்கை எதிர்காலத்தில் அமைச்சரவை உப குழுவிற்கு அனுப்பப்படும். | 2024 ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கையின் பிரதியொன்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,043 ,866 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 15,438,410 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 13,394,544 வீழ்ச்சி காணப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அரச மானிய வருமானம் ரூபா 12,939,815 இனால் அதிகரித்தமைக்கு ஒப்பாக ஏனைய வருமானம் ரூபா 16,147,996 இனால்குறைந்து இருப்பதும் சம்பளம் மற்றும் செலவினம் ரூபா 17,441,824 இனால் மற்றும் வழங்கள் மற்றும் நுகர்வோர் சேவைகள் ரூபா 5,309,374 இனால் அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட Tea quality Grading & colour separating system செயற்திட்டத்திற்காக 2023 ஆண்டு வரை கூட்டுத் தொகை ரூபா 13,171,672 செலவிடப்பட்டு இருந்ததுடன் 2023 சனவரி நிறைவு செய்ய வேண்டிய செயற்திட்டம் 2025 ஏப்ரல் வரை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. 2022 சனவரி 01 திகதி ஆரம்பிக்கப்பட்டு இருந்த தொழில்நுட்ப பரிமாற்ற செயற்திட்டத்தினால் எதிர்பார்த்த நோக்கமொன்றான E - net Solutions (Pvt) Ltd மூலம் ஆதார் சீ கிளார்க் நிலைய பதவியணியிற்கு EPGA தொழில்நுட்ப பரிமாற்றத்தை நிறைவு செய்திருக்கவில்லை. அதன் இன்னுமொரு நோக்கமான Tea Colour Sorting இயந்திரத்தை வெளியீடு மற்றும் விற்பனையின் இறுதி கட்டத்தை பூர்த்தி செய்யவும் இயலாதிருந்தது. | செயற்திட்டத்திற்கான FPGA தொழில்நுட்ப பரிமாற்ற நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டது நிர்மாணம் தொடர்பான அனைத்து பகுதிகளும் சார்ந்த அறிவை பெற்று குறித்த அனைத்து தொழில்நுட்ப ஆவணங்களும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இயந்திரத்தின் விரவான பரீட்சிப்பிற்கு தேவையான இயந்திரத்தை தயார் செய்யும் நடவடிக்கை மற்றும் மாதிரி (Sample) தற்போது தயார் செய்யப்பட்டுள்ளதுடன 2025 ஜுன் மாதம் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கையின் பின்னர் இறுதிக் கட்டம் நிறைவடைய உள்ளதென. | அரச நிதியை செலவிட்டு மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களினால் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ளக்கூடிய வாறு நடவடிக்கைகளை திட்டமிட்டவாறு மேற்கொள்ள பொறுப்பேற்க வேண்டும். |
| (ஆ) | விவசாய நடவடிக்கைகளில் திரவப் பசளை தெளிப்பதனை இலகுபடுத்த டிரோன் உபகரணம் ஒன்றை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தை ஒரு வருடத்தினுள் நிறைவு செய்யும் கால சட்டகத்துடன் 2022 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இருந்ததுடன் 2023 ஆண்டிறுதியில் இந்த செயற்திட்டத்திற்காக மதிப்பீட்டு கிரயமான ரூபா 1,000,000 இனை விஞ்சி ரூபா 1,629,073 தொகை செலவிட்டிருந்த போதும் எதிர்பார்த்த பூர்த்தியை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | திரவப் பசளை தெளிப்பதனை இலகுபடுத்த உற்பத்தி செய்யப்பட்ட உபகரணத்தின் தரையிறக்கும் கருவியை (Landing year) நிறுவனத்தினுள் உற்பத்தி செய்யப்பட்ட 3D printing பகுதி பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. அவற்றின் சக்தி போதாது என பறக்கும் பயிற்சியின் போது அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டு விமானப் படையின் உதவியை பயன்படுத்தி அந்த பகுதிகளை நவீனமயமாக்கலை ஆரம்பித்த போதும் விமானப் படையில் குறித்த பணியை மேற்கொள்வதற்காக இருந்த ஆட்கள் வேறு பணிகளிற்கு இடமாற்றம் பெற்றதனால் அப் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை. தற்போது இந்த பகுதியை வெளிநாட்டிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்ய முடியுமா அல்லது வடிவமைத்து | அரச நிதியை செலவிட்டு மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களினால் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ளக்கூடிய வாறு நடவடிக்கைகளை திட்டமிட்டவாறு மேற்கொள்ள பொறுப்பேற்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்ள முடியுமா என்பது பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. | |
| (இ) | 2018 செப்டம்பர் 07 திகதி வரை ரூபா 1,375,400 செலவில் வடிவமைக்கப்பட்ட RFID Guest gate with Accessories மற்றும் RFID Host Gate உபகரணத்திற்கு தேவையான தரவுத் தொகுதியை மற்றும் முகாமைத்துவ தொகுதியை கணக்காய்வு திகதிய 2025 ஏப்ரல் 22 வரை பயன்படுத்த முடியுமான நிலைக்கு கட்டியெழுப்பியிருக்கவில்லை. | RF-ID தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு நூலக சேவைகளை தன்னியக்க தொகுதியை பரீட்சிக்கும் நடவடிக்கை நூலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இங்கு நிறுவனத்தின் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட வன்பொருள் தொகுதியுடன் ஒன்றாக செயற்படும் பொருந்தாமை காணப்பட்டதால் 2025 ஆண்டில் செயல்நடவடிக்கை திட்டத்தில் செயற்திட்டமொன்றாக மொத்த நூலகத் தொகுதியையும் மென்பொருள் மற்றும் வன்பொருள் ஊடாக கட்டியெழுப்ப தீர்மானிக்கப்பட்டது. | அரச நிதியை செலவிட்டு மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களினால் எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ளக்கூடிய வாறு நடவடிக்கைகளை திட்டமிட்டவாறு மேற்கொள்ள பொறுப்பேற்க வேண்டும். |
| (ஈ) | நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களிற்கு இடையே நவீன தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் உள்ளடக்கப்பட்ட போதும் அப் பணி தொடர்பாக 2020 - 2024 ஆண்டுகளில் கண்காட்சி நடவடிக்கைகளிற்காக தொடர்பு படுவது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | நிறுவன தொழல்நுட்ப நோக்கத்துடன் தொடர்பாக. காணப்படும் கண்காட்சியாக நிறுவனம் முக்கியத்துவம் வழங்கியது இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் வருடாந்தம் நடாத்தும் TECNO மற்றும் தேசிய விஞ்ஞான தினதத்திற்கு நேரொத்த நிகழ்வாக அமைச்சினால் ஒழுங்கு செய்யப்படும் விஞ்ஞான தினத்தை கொண்டாடும் கண்காட்சியாகும். பல ஆண்டுகளாக நிலவிவரும் தொழில்நுட்ப மற்றும் மனிதவள பற்றாக்குறை கண்காட்சிகளிற்கு பங்குபற்ற தாக்கம் செலுத்திய முக்கிய இடராகும். | நவீன தொழில்நுட்பத்தை மேம்படுத்து உச்ச தலையீட்டை நிறுவனத்தினால் மேற்கொள்ள வேண்டும். |
| (உ) | 2024 ஆண்டில் பண்டக கணிப்பீட்டு நடவடிக்கைகளை விரைவுபடுத்த ரூபா 936,271 செலவில் Based Fixed Assets Verification தொகுதி ஒன்றை வடிவமைத்திருந்த போதும் 2025 ஏப்ரல் வரை பண்டக கணிப்பீட்டு நடவடிக்கைகளை நிறைவு செய்திருக்கவில்லை. | நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவின் மூலம் நிறுவனமயப்பட்ட செயற்திட்டமாக அபிவிருத்தி செய்யப்பட்ட மென்பொருள் செயற்திட்டமொன்றாகும். அந்த செயற்திட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது நிறைவடைந்துள்ளது. இத் தொகுதியை பரீட்சித்தல் மற்றும் உறுதி செய்தல் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டிய | பண்டக கணிப்பீட்டு நடவடிக்கைகளை இலகுவில் மேற்கொள்ளும் நோக்கில் இஸ்தாபிக்கப்பட்ட மென்பொருள் தொகுதியை பயன்படுத்த முடியுமான நிலைக்கு விரைவில் ஆக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பணியாகும். | |
| (ஊ) | நிறுவனத்தின் 35 மீற்றர் பரப்பளவு நில அளவொன்று தொலை தொடர்பு உபகரணங்களை பொருத்துவதற்காக மொபிடெல் தனியார் கம்பனியிற்கு நீண்ட காலமாக வழங்கியிருந்ததுடன் குறித்த உடன்படிக்கை 2023 மார்ச் மாதத்தின் பின்னர் முடிவடைந்துள்ள போதும் 2025 ஏப்ரல் மாதம் வரை புதிய உடன்படிக்கையில் ஈடுபட்டிருக்கவில்லை. | புதிய உடன்படிக்கை நிறைவடையும் தருவாயில் காணப்படுவதுடன, அதனை நிறைவு செய்யும் நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. | உடன்படிக்கை காலாவதியாகும் போது உரிய திகதியில் புதிய உடன்படிக்கையில் ஈடுபட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | நிறுவனத்தின் அடிப்படை நோக்கமாக தேசிய அடிப்படையுடன் கூடிய நவீன தொழில்நுட்ப இயலுமையை மேம்படுத்துவதற்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினூடாக புத்தாக்க நிலையமொன்றாக ஆகுவதெனினும் அந்த நோக்கத்தை அடைந்து கொள்வது தொடர்பில் முன்னுரிமை வழங்கி செயற்படாது, மீளாய்வாண்டு இறுதியில் காணப்படும் நிதியம் ரூபா 139,704,380 தொகை திறைசேரி உண்டியல்களில் மற்றும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த அனைத்து முதலீடுகளும் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் பாடநெறிகள் மற்றும் மதியுரை சேவைகளினால் உறுவான மேலதிகத்தினால் மேற்கொண்ட முதலீடுகளாகும். | நிறுவனத்தில் காணப்படும் நிதியை பயன்படுத்தி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு புத்தாக்கத்தின் மூலம் நவீன தொழில்நுட்ப இயலுமையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதாயின் திறைசேரி மானியங்களை பெற்றுக் கொள்வதனை மட்டுப்படுத்த வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் தேறிய மிகையாக ரூபா 2,043,865 நிதிக்கூற்றுக்களில் காண்பித்துள்ள போதும் ரூபா 228,712,899 ஆன மொத்த இலாபத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் ஈட்டியிருந்தது ரூபா 30,066,598 மாத்தரம் ஆவதுடன் அதற்காக செலவிட்டிருந்த நிருவாக, வழங்கல், பராமரிப்பு, ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் செயற்திட்ட செலவு ரூபா 220,908,875 ஆனதில் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் ரூபா 90,841,477 ஆன் பற்றாக்குறையை பெறப்பட்டிருந்தது. மேலும் இந்த மொத்த செலவில் செயற்திட்ட செலவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவாக ரூபா | எமது நிறுவனம் முக்கியமாக அரச ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல், நாட்டின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தேவைப்பாட்டிற்காக தனியார் துறை முன்வராத, தேசிய மற்றும் சமூகரீதியான தேவைப்பாடுகளிற்காக முன்வந்து ஆக்கபூர்வமான தீர்வுகளை வழங்கும் நிறுவனமொன்றாகும். அதன் காரணமாக நிதிரீதியாக மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடொன்றை மேற்கொண்டு முடிவுகளிற்கு வருதல் பொருத்தமற்றதென மற்றும் மீளாய்வாண்டில் ஏனைய வருமானங்களினால் ஈட்டிய வருமானத்திற்கு ஒப்பாக | செயற்பாட்டு நடவடிக்கைகளினால் வருமானம் ஈட்டுவதற்கு மற்றும் நிறுவனத்தின் வெற்றிகரமான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு நவீன தொழில்நுட்பத்தை மேம்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த சரியான வழிகாட்டலை நிறுவனத்தினால் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 12,290,261 அதாவது, 6 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டு இருந்தது. | பாடநெறி செயற்திட்டம் மற்றும் மதியுரை சேவைகளினால் பெற்றுக் கொடுத்த பங்களிப்பை விட அதிக பங்பளிப்பொன்றை 2025 இல் வளர்த்துக் கொள்ள திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றதென. | |
| (ஐ) | தொலை தொடர்பு பிரிவிற்கு ரூபா 9,500,000 செலவில் இலத்திரனியல் உபகரணங்களை பெற்றிருந்த போதும் காலத்திற்கேற்ற தேவைகளின் பிரகாரம திட்டமிடப்பட்ட இலத்திரனியல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் எதனையும் மீளாய்வாண்டினுள் நடாத்தி இருக்கவில்லை. | பல்கலைக்கழகத்துடன் ஒத்துழைப்புடன் வானியல் ஆராய்ச்சி மேற்கொள்வதுடன் இந்த ஆராய்ச்சிகளிற்கு மேலதிகமாக மாணவர்களிற்கு வானியல் பாடநெறிகளை நடாத்துதல் மற்றும் நிறுவனம் கல்வி சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்துதல் உள்ளங்குகின்றன நாட்டினுள் வானியல விடயதை விரிவாக்கும் நோக்கில் ஒழுங்கான பல முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இந்த முன்மொழிவுகளிற்கு இடையே தேசிய கண்காணிப்பு நிலையமொன்றை இஸ்தாபித்தலும் உள்ளடங்குகின்றது. | காலத்திற்கேற்ற தேவைகளின் பிரகாரம் திட்டமிடப்பட்ட இலத்திரனியல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடங்கும் 2024 திசெம்பர் 31 திகதிக்கு நிறைவு செய்ய வேண்டிய ஒவ்வொறு 8 உப செயற்திட்டங்களை ஆண்டினுள் செயற்படுத்தியிருக்காததுடன் செயற்படுத்திய 19 உப செயற்திட்டங்களின் செயலாற்றுகை 10 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையான வீச்சளவில் காணப்பட்டது. | செயல் நடவடிக்கை திட்டத்தின் செயலாற்றல் 10 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையான வீச்சளவில் காணப்படுவதற்கு காரணமாக குறித்த செயற்திட்டங்களில் செயற்படும் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப ஆளணி அங்கத்தவர்கள் விலகிச் செல்லல் மற்றும் ஆட்சேர்க்கப்படும் ஆளணி அங்கத்தவர்ளை நிறுத்தி வைத்துக் கொள்ளவது நிறுவனம் நீண்ட காலமாக முகம்கொடுக்கும் பிரச்சினையாகும். அந்த சூழ்நிலையில் செயலாற்றுகையை அதிகரிப்பது கடினமாகும். | செயல் நடவடிக்கை திட்டத்தின் செயலாற்றலை உச்ச வெற்றியுடன் அடைந்து கொள்ள வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தினால் 2016 மற்றும் 2018 ஆண்டுகளில் கொள்வனவு செய்த | பயிற்றப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களின் கீழ் இந்த | நிதியத்தை பயனுள்ளதாக |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 11,940,077 பெறுமதியான 03 இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்த திகதி முதல் பயன்படுத்தப்படாத நூலகம் மற்றும் தொலைத் தொடர்பு பிரிவில் விளைவற்று வைக்கப்பட்டு இருந்ததுடன் கைத்தொழில் சேவை பிரிவில் ISD தொகுதியை செயற்பாடுடன் நடாத்த தேவையான ரூபா 17,348,222 பெறுமதியான உதிரிப் பாகங்கள் 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக விளைவற்று காணப்பட்டன. | இயந்திரத்தை வர்ணம் தீட்டும் நடவடிக்கைக்காக (DYEING) மற்றும் பயிற்றுவிக்கும் நடவடிக்கைகளுக்காா பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாறே மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் மாணவர்களிற்காக இந்த இயற்திரம் பயன்பாட்டிற்கு வழங்கப்படுகின்றது. | ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்து இயந்திரம் விளைவற்று காணப்படுவதனை தவிர்த்துக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | தொல்பொருள் திணைக்களத்திற்கு தொல்பொருள் ஆய்வு மற்றும் அகழ்வு நடவடிக்கைகளிற்காக புகைப்படங்களை எடுக்கும் நோக்கில் 2016 ஆண்டில் ரூபா 10,564,677 ஆன ஆளில்லா விமானமொன்றை கொள்வனவு செய்து அதனை செயற்படுத்த ரூபா 110,320 செலவிட்டு தேவையான பயிற்சி மற்றும் பறப்பதற்கு தேவையான அனுமதியை பெற்றுள்ள போதும் கொள்வனவு செய்த திகதி முதல் கணக்காய்வு திகதிய 2025 ஏப்ரல் 22 திகதி வரை குறித்த பணிக்காக எடுக்காத காரணத்தால் செலவிடப்பட்ட ரூபா 10,674,999 தொகை விளைவற்றதாக ஆகியிருந்தது. | இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபைக்கு ஆறு ஆண்டுகளிற்கு (06) அதிக காலம் கடந்துள்ள போதும் இந்த உயர் எல்லையை திருத்த முடியவில்லை. 400 வரை ருயுஏ செயற்பாடுகளிற்காக அனுமதி வழங்கும் புதிய ஊயுயுளுடு பிரமாணம் தொடர்பாக அறிவிக்கப்பட்டது 2022 நவம்பர் மாதத்திலாகும். இந்த காலம் வரை ருயுஏ செயற்திட்டங்களில் பயன்படுத்த காணப்பட்ட சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டிருந்ததுடன் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக நலன்களை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் தவறியிருந்தன. நாளாதுவரையாக்கப்பட்ட உயர் எல்லை மட்டுப்பாட்டின் கீழ் மீண்டும் ஆரம்பிக்கும் போது விமானத்தின் பறக்கும் திட்டமிடல் முறைமையின் முக்கிய மென்பொருள் தவறு ஏற்பட்டது.இலங்கையின் ஆரம்ப வழங்குனரான Orel Pvt Ltd இடம் வாய் மூலமாக மற்றும் எழுத்து மூலம் உதவி கோரிய போதும் இதுவரை தீர்பொன்றை வழங்க இயலாதுள்ளது. | இந்த செயற்திட்டத்திற்காக செலவிட ஒன்பது ஆண்டுகளிற்கு அதிக காலம் கடந்துள்ள போதும் தேவையான நோக்கத்தை அடைந்து கொள்ள தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் அங்கீகர ஆளணி 177 ஆவதுடன் வெற்றிட எண்ணிக்கை 93 அதாவது அங்கீகார ஆளணியின் 54 சதவீதமாகும. வெற்றிட எண்ணிக்கையின் 47 அதாவது 50 சதவீதம் நிறுவனத்தின் முக்கிய பணிகளான நவீன தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்வதனை துரிதப்படுதல் மற்றும் எதிர்கால கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளுடன் நேரடியாக பங்களிப்பு செய்யும் தொழில்நுட்ப வகையிலான வெற்றிடங்களாகும். | மொத்த அங்கீகார ஆளணியின் 54 சதவீதம் வெற்றிடமாக காணப்படுகின்றது. பலதரப்பட்ட காரணங்களால், அவ்வாறு ஆட்சேர்ப்பு செய்த தொழில்நுட்ப ஆளணியில் பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் விலகிச் சென்றதுடன் சில சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் ஓய்வூதிய வயதை அடைந்ததன் மீது ஓய்வு பெற்றனர்ரென. | நிறுவன செயற்பாடுகளை தடையின்றி நடாத்திச் செல்ல இயலுமானவாறு ஆளணியை பேணிக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |